**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2023**
**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திரிகடுகம் என்ற நூல் தலைப்பு உணர்த்தும் மூன்று மருந்துப் பொருள்கள் யாவை?
2. நாலடியார் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
3. நண்டுக்கு எமன் யார்?
4. உலக்கை மேல் காக்கையை யாருக்கு ஒப்பிடுகிறார் முன்றுறையரையனார்?
5. சமண சமயம் சார்ந்த அறநூல்கள் யாவை?
6. வன்சொல்லால் வெல்ல முடியாததை எச்சொல்லால் வெல்ல முடியும்?
7. வெற்றி வேற்கையின் வேறு பெயர் யாது?
8. யாரை அறிஞர்கள் என்கிறோம்?
9. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் சிற்றிலக்கிய வகை யாது?
10. கலம்பக உறுப்புகள் எத்தனை?
11. மடல் இலக்கிய வகையின் வேறு பெயர்கள் யாவை?
12. பண்டைய பரணி நூல்களுள் நான்கினைக் குறிப்பிடுக.
13. பள்ளு இலக்கியங்கள் மிகச் சிறப்புடன் உருவான காலம் எது?
14. உலா இலக்கணத்தை முதலில் கூறிய நூல் எது?
15. முதல் அந்தாதியாகக் கருதப்படும் அந்தாதி எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கல்விச் செல்வத்தின் சிறப்பு யாது?
2. ஈகையும் இரத்தலும் குறித்து இன்னா நாற்பது கூறுவன யாவை?
3. எவை அறநூல்கள் என்று அழைக்கப்படுகின்றன?
4. நட்பில் பிரிவு கூடாது என்பதற்கு நன்னெறி கூறியுள்ள உவமையை விளக்குக.
5. சிற்றிலக்கியங்களைப் பொருள் அடிப்படையில் எவ்வாறு பாகுபாடு செய்யலாம்?
6. தலைவிக்காகத் தலைவன் செய்யத் தயாராய் உள்ள வேலைகள் யாவை?
7. தொடுக்கும் கடவுள் பழம் பாடல் எனும் பாடல் வழி மீனாட்சியம்மையின் மாண்புகளை விளக்குக.
8. அந்தாதி என்றால் என்ன? அதன் பொருளை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நாலடியார் கூறும் நிலையாமை குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பின்னர்த் தோன்றிய அற நூல்கள் குறித்து எழுதுக.

2. (அ) உலக நீதி கூறும் அறக் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தலைவின் பெருமைகளாக அழகர் கிள்ளைவிடு தூது கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

3. (அ) மடல் இலக்கியம் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) சதகத்தின் பாடுபொருள் குறித்து விளக்குக.

***